**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை :திரு. ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

**2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**குற்ற பல்வகை மனு எண். 42/ 2026**

**குற்ற எண். 78/2026**

மணிகண்டன் ... மனுதாரர்/எதிரி/வாகன உரிமையாளர்

**/எதிர்/**

அரசுக்காக அதன் காவல் ஆய்வாளர்,

மாயனூர் காவல் நிலையம். ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு மீது இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.வடிவேல் B.A.,B.L.., அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை எண்.1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகியும், அவர்களின் வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி/வாகன உரிமையாளர் தரப்பில் Mahindra Jeeto plus 16 BSVI என்ற TN–47–BU–1247 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை இடைக்கால பராமரிப்பில் மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி குவிமுச பிரிவு 497 மற்றும் 503 –ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/எதிரி/வாகனத்தின் உரிமையாளர். மேற்படி மனுதாரரின் வாகனம் சம்பவத்தில் ஈடுபடவில்லை. புலன் விசாரணை அதிகாரி சரியான புலன் விசாரணை செய்யாமல் தவறாக வழக்கில் சேர்த்துள்ளார். குற்ற சம்பவத்திற்கும், வாகனத்திற்கும் தொடர்பு இல்லை. மேற்படி வாகனத்தை வைத்து தான் மனுதாரர்

வாழ்ந்து வருகிறார். மனுதாரரின் வாகனம் காவல் நிலையத்தில், திறந்த வெளியில் வெயில், மழையினால் பாதிக்கப்பட்டு இயந்திர கோளாறு ஏற்படும் நிலை உள்ளது. மனுதாரருக்கு, நான்கு சக்கர வாகத்தை இடைக்கால பொறுப்பில் வழங்கினால் நீதிமன்ற நிபந்தனைகளை கடைபிடிக்க தயாராக உள்ளார். வழக்கு விசாரணைக்கு தேவைப்படும் பொழுது வாகனத்தை மனுதாரருக்கு ஒப்படைக்குமாறு உறுதி கூறுகிறார். அதனால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்</u>

1) கடந்த 28.02.2026 ம் தேதி புகார்தாரரின் இரண்டு மகள்களும் பள்ளிக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வரும்போது சின்னசேங்கல் பாறைக்களம் அருகே வந்து கொண்டிருந்தவர்களிடம் மணிகண்டன் என்பவர் பால் வண்டியில் வந்தவர் செல்போனில் ஒருவருக்கு கால் செய்து பேச சொல்லி வற்புறுத்தியதாக புகார்தாரரின் இரண்டு மகள்கள் தங்களிடம் வந்து சொன்னதாகவும் பின்னர் 26.02.2026 ம் தேதி மாலை சுமார் 4.20 மணியளவில் சின்னசேங்கலில் உள்ள கல்குவாரிக்கு எதிரே புகார்தாரரும், அவரது கணவர் ரவிக்குமார் மற்றும் புகார்தாரரின் மகள்களும் நின்றுகொண்டிருந்தபோது பால்வண்டியை அடையாளம் காட்டியதால் கேட்டதற்கு அப்படி தாண்டி பேச சொல்லுவேன் என தகாத வார்த்தையால் திட்டியதாகவும், மேலும் மனுதாரரிடம் மேற்படி வாகனத்தை ஒப்படைத்தால் அவர் தலைமறைவாக கூடும் என்பதாலும் மேற்படி வாகனத்தை ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் பதிவெண் இல்லாத Mahindra Jeeto plus 16 BSVI என்ற TN–47–BU–1247 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை மனுதாரர்/எதிரி/வாகன உரிமையாளரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க வேண்டுமா? இல்லையா? என்பதை ஆகும்.

3) மனுதாரர் மீது மனுதாரருக்கு வந்த செல்போனில் பின்னால் அமர்ந்து சென்ற நிகழ்வுநிலை புகார்தாரரின் மகளிடம் பேச சொல்லி அது பற்றி அடுத்தநாள் அந்த வழியாக வந்தபோது மனுதாரர்கள்/எதிரியிடம் பால் வண்டியை தடுத்து கேட்ட போது எதிரி அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளி கொன்றுவிடுவேன் என கொலை மிரட்டல் விடுத்ததாக BNS பிரிவு

296(b), 115(2), 351(2) மற்றும் 4 TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது.

4) மனுதாரர் தரப்பில் அவரது நான்கு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில், திறந்தவெளியில் நிற்க வைக்கப்பட்டு இயற்கை சீதோசத்தினால் சேதம் அடைய வாய்ப்பு உள்ளது என்றும், அதனால் மனுதாரரிடம் இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க கோரப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் பார்வையிட்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற முன் தீர்ப்பான Crl.O.P.No.646/2024, Annadurai Vs. The Inspector of Police Kurisilapet Police Station Tirupathur District. என்ற முன் தீர்ப்பில் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் வழக்கு சொத்தை இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க அதிகாரம் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், இந்நீதிமன்றம் பார்வையிட்ட இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பான 2002 (10 SCC 283, Sundra bhai Ambalal Vs. State of gujarat என்ற முன் தீர்ப்பு வாகனம் பழுதடையாமல் இடைக்கால பாரமரிப்பில் ஒப்படைக்க வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை முடிய காலதாமதமாகும். அதுவரை காவல்நிலைய திறந்தவெளி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் பாதிப்படைய வாய்ப்பு உண்டு. அதனால் மனுதாரரின் வசம் இடைக்கால பராமரிப்பில் வாகனத்தை ஒப்படைப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் படி நான்கு சக்கர வாகனத்தை மனுதாரரின் இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.**

1. மனுதாரர்/வழக்கு சொத்தின் உரிமையாளர் வழக்கு சொத்தான Mahindra Jeeto plus 16 BSVI என்ற TN-47-BU-1247 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை புகைப்படம் எடுத்து அதில் வழக்கு விபரம் மற்றும் வாகனத்தின் விவரம் மனுதாரர், மனுதாரர் வழக்கறிஞர், வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கையொப்பம் இட்டு அலுவலக முத்திரையிட்டு, பிரிவு 63 BSA சான்றிதழுடன் போட்டோ தாக்கல் செய்யவேண்டும். மனுதாரர் வாகனத்தின் விவரங்கள் அடங்கிய பஞ்சநாமா தாக்கல் செய்ய வேண்டும்.

2. மனுதாரர்/வழக்கு சொத்தின் உரிமையாளர் Mahindra Jeeto plus 16 BSVI என்ற TN-47-BU-1247 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்திற்காக

மனுதாரரும், மற்றொருவரும் ரூ.4,00,000/-த்திற்கு பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

3. வாகனத்தின் இயற்கை அம்சங்களை வழக்கு முடியும் வரை மாற்ற கூடாது. நீதிமன்ற அனுமதியின்றி வாகனத்தின் உரிமை மாற்றம் செய்யக்கூடாது.

4. நீதிமன்றம் வேண்டும்போது விசாரணையின்போதும் வழக்கு சொத்தினை சமர்ப்பிக்க வேண்டும்.

இறுதியாக வழக்குச் சொத்தான Mahindra Jeeto plus 16 BSVI என்ற TN-47-BU-1247 பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து மனுதாரர்/3ம் நபர்/வாகன உரிமையாளரிடம் இடைக்கால பராமரிப்பில் மேற்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்படைக்க உத்தரவிட்டு இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, இன்று 24.03.2026-ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் அவை அறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.01 07:06:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**